# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் புதூஹ் பள்ளிவாயிலில்
## 01.03.2013 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தசஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் கூறினார்கள்:**

وَالَّذِيْنَ يَصِلُوْنَ مَآ اَمَرَ اللّٰهُ بِهٖٓ اَنْ يُّوْصَلَ وَيَخْشَوْنَ
رَبَّهُمْ وَيَخَافُوْنَ سُوْٓءَ الْحِسَابِ ﴿۲۲﴾

*“மேலும் எவற்றை இணைக்கவேண்டுமென்று அல்லாஹ் கட்டளை இட்டுள்ளானோ அவற்றை இணைப்பவர்களும், தங்கள் இறைவனுக்கு அஞ்சுபவர்களும் தீய கேள்வி கணக்குக்கு அஞ்சுபவர்களும்,”* (13:22) என்ற வசனத்தில் எந்தத் தொடர்புகளை இணைக்க வேண்டுமென்று கட்டளையிடப்பட்டுள்ளதோ அவற்றை இணைக்க வேண்டும் என்று மட்டும் இறைவன் கட்டளை இடவில்லை. மாறாக அவற்றை நிரந்தரமாக நிலைநாட்ட வேண்டும் என்றும் கட்டளையிடுகின்றான்.

அல்லாஹ்விடமிருந்து தொலைநோக்குப் பார்வையைப் பெற்றுள்ள ஒரு உண்மையான நம்பிக்கையாளர் அல்லாஹ்வின் திருப்திக்கு மாற்றமான செயலைச் செய்வார் என்பதை அவரால் கற்பனை செய்துகூட பார்க்க முடியாது. ஒரு உண்மையான மூஃமின் அல்லாஹ்வுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்ட பிறகு, அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப, அல்லாஹ் இணைக்க வேண்டும் என்று கூறியுள்ள தொடர்புகளை இணைத்த பிறகு அதில் அவர் நிரந்தரமாக நிலைத்திருக்கின்றார். *எந்தத் தொடர்புகளை நிலைநாட்ட வேண்டும் என்று அல்லாஹ் கட்டளையிட்டுள்ளானோ அவற்றை அவர்கள் நிலைநாட்டுவர்* என்பதே அறிவுள்ள ஓர் உண்மையான மூஃமினின் அடையாளமாகும் என்று அல்லாஹ் கூறுகின்றான்.

இந்த வசனத்தின் இந்தப் பகுதியை விளக்கியவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் சுருக்கமாக இவ்வாறு கூறுகின்றார்கள்:

அல்லாஹ்வுக்கு கட்டுப்படுவதிலும் அவன் மீதுள்ள நேசத்திலும் முழுமைத் தன்மையைப் பெற்று அவனது கட்டளை மற்றும் அவனது வழிகாட்டலுக்கேற்ப அவர்கள் படைப்பினங்களின் பக்கம் கவனம் செலுத்துகின்றனர். அவர்கள் இறை கட்டளைக்கேற்ப, படைப்பினங்களின் ஒற்றுமை, சகோதரத்துவம் மற்றும் நன்மை செய்தல் ஆகியவற்றின் உறவை ஏற்படுத்திக் கொள்கின்றனர்.

*அவர்கள் தங்கள் இறைவனுக்கு அஞ்சுகின்றனர். தீய கேள்வி கணக்குக்கு அஞ்சுகின்றனர். இதன் காரணமாகவே அல்லாஹ்வுக்கு கட்டுப்படுவதிலும் அவன் மீதுள்ள நேசத்திலும் அவர்கள் முழுமைத் தன்மையைப் பெறுகின்றனர்.*

அவர்களது உள்ளத்தில் தங்களது இறைவனைப் பற்றிய அச்சம் இருக்கின்றது. கஷிய்யத் என்ற சொல் அரபி அகராதியில் மிக உயர்வான பண்புகளை உடைய ஒன்றின் சிறப்புகளையும் அழகையும் அடையாளம் கண்டு கொண்ட பிறகு அது தனது கையை விட்டும் நழுவிச் சென்று விடக்கூடாதே! என்ற அச்சத்திற்கு கூறப்படுகிறது. எந்த பொருள் தொடர்பாக அஞ்சப்படுகிறதோ அதைப் பற்றிய அறிவு கிடைக்கும் போது தான் அதனை கஷிய்யத் என்று கூறுகின்றோம். மேலும் அந்த அச்சம் இழப்பு ஏற்பட்டு விடுமே! அல்லது சேதம் ஏற்பட்டு விடுமே! என்ற அச்சம் அல்ல. மாறாக அந்தப் பொருள் மிகவும் உயர்வானதும் மகத்துவமிக்கதும் ஆகும் என்பதனால் உள்ள அச்சமாக அது இருக்க வேண்டும். கவனக் குறைவின் காரணமாக அதன் நெருக்கத்தைப் பெறுவதை நான் இழந்து விடக்கூடாதே! என்ற அச்சம் இருக்க வேண்டும்.

ஒரு மூஃமினின் பார்வையில் விண்ணிலும் மண்ணிலும் உள்ள எல்லாவற்றையும் விட மிகவும் உயர்வானதும் மகத்துவமிக்கதுமான ஒன்று இறைவனே ஆவான். இதைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. இருக்கவும் முடியாது. ஏற்கனவே கூறியிருந்ததற்கேற்ப ஒரு நம்பிக்கையாளர் இறைவனின் நெருக்கத்தைப் பெற்று

பின்னர் அவனது படைப்பினங்களின் பக்கம் கவனம் செலுத்துகின்றார். இது ஒரு மூஃமினுடைய அடையாளமாகும். இறைவன் மீதுள்ள அச்சமும் தீய கேள்விக் கணக்கு தொடர்பான அச்சமும் இறைவனுக்கு கட்டுப்படாமலும் அவனது படைப்பினங்களுக்குரிய உரிமையைச் செலுத்தாமல் இருப்பதனால் தான் ஒரு மூஃமினுக்கு ஏற்படுகின்றது. அவ்வாறான அச்சம் ஏற்பட வேண்டும். இதுவே ஒரு மூஃமினின் அடையாளமாகும். இறைவன் அவரிடம் வெறுப்படைவதை அவன் அவரை புறக்கணிப்பதை அவரால் சகித்துக் கொள்ளவே முடியாது. பொதுவாக இதைத்தான் அவர் விரும்புவார். ஒரு உண்மையான நம்பிக்கையாளராக இல்லாமல் கொஞ்சம் ஈமானுள்ள ஒருவரும் இதைத்தான் விரும்புவார்.

ஆனால் உலகில் நாம் பார்க்கின்றோம். பலரும் திருக்குர்ஆனை ஓதுகின்றார்கள். அதன் பொருளையும் படிக்கின்றனர். இறைவன் மீதுள்ள அச்சத்தையும் வெளிப்படுத்துகின்றனர். இறைவன் புறமிருந்தும் அவர்கள் புறக்கணிக்கப்படுவதை அவர்கள் ஒருபோதும் விரும்புவதில்லை. ஆனால் அவர்கள் அல்லாஹ்வின் படைப்பினங்களுக்குரிய உரிமையை செலுத்துவதில்லை. மேலும் எந்தத் தொடர்புகளை இணைக்க வேண்டும் என்று அல்லாஹ் கட்டளையிட்டிருந்தானோ அவற்றை உண்மையான முறையில் இணைப்பதற்கு அவர்கள் முயற்சி செய்வதில்லை. உலகிலுள்ள பெரும்பாலான முஸ்லிம்களிடம் இந்த முரண்பாடு தென்படுகின்றது. இதற்கான விருப்பமும் இவ்வாறுதான் உள்ளோம் என்ற அவர்களது வாதமும் இருந்தும் கூட இந்த நிலை தான் தென்படுகிறது. அஹ்மதிகள் தொடர்பாகவும் இறைவன் ஓர் உண்மையான மூஃமினுக்கு தரும் விளக்கத்திற்கு நூறு சதவிகிதம் முற்றிலும் அவர்கள் பொருந்துகின்றனர் என்றும் நாம் கூற முடியாது. எனவே நாமும் இது தொடர்பாக நம்மை ஆய்வு செய்து பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும்.

இப்போது நான் முஸ்லிம்களின் பண்புகளிலிருந்து ஒரு பண்பை மட்டும் எடுத்துக்கூற விரும்புகின்றேன். இது தொடர்பாக அல்லாஹ்வின் மிகவும் தெளிவான கட்டளை இருக்கின்றது. முஸ்லிம்களிடம் இருக்க வேண்டிய சிறப்பம்சங்கள் என்ன? என்பது பற்றியும் அவை அவர்களிடம் இருக்க வேண்டும் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது. மூஃமினின் சிறப்புகளில் ஒரு மிகப்பெரும் சிறப்பு இதில் கூறப்பட்டிருக்கின்றது. இதுபற்றி நான் முதலில் பொதுவாக முஸ்லிம் நாடுகளைப் பற்றி எடுத்துக் கூறியவாறு விளக்குவேன். இந்த நாடுகளில் முஸ்லிம் ஆட்சியாளர்களும் ஆலிம்களும் இஸ்லாம் மற்றும் ஈமானின் பெயரில் இந்த கடமையை அல்லது இந்த சிறப்பை அழிக்க ஆரம்பித்துள்ளனர்.

அல்லாஹ் கூறுகின்றான்: ருஹமாவு பைனஹூம் – ஒரு உண்மையான நம்பிக்கையாளருக்குரிய அடையாளம் என்னவென்றால் அவர்கள் பரஸ்பரம் ஒருவர் மற்றவருடன் எல்லையில்லா கருணையுடனும், மென்மையுடனும், பரிவுடனும் நடந்து கொள்வர்.

நான் ஏற்கனவே கூறியது போன்று இந்த கட்டளை, மூஃமினுக்குரிய இந்த அடையாளம் மார்க்கம் மற்றும் இஸ்லாத்தின் பெயரில் எந்த அளவு அழிக்கப்பட்டு வருகின்றதென்றால் அது ஒரு நாட்டில் மட்டுமல்லாமல் ஏறக்குறைய முழு முஸ்லிம் உலகிலும் இது நமக்கு தென்படுகிறது. சில இடங்களில் குறைவாகவும் சில இடங்களில் அதிகமாகவும் இந்நிலை இருக்கின்றது. ஏனென்றால், ஒவ்வொருவரது சுய லாபமும் இறைவனது திருப்தியைப் பெறுவதற்கான முயற்சியின் மீது ஆதிக்கம் செலுத்துகிறது. பாகிஸ்தானின் நிலைமையைப் பாருங்கள். நாள்தோறும் பலர் கொலை செய்யப்படுகின்றனர். ஒரு முஸ்லிம் இன்னொரு முஸ்லிமை கொலை செய்கின்றார். கடந்த சில வருடங்களில் தங்களுக்கிடையில் நடந்துள்ள சண்டைகள், தாக்குதல்கள் ஆகியவற்றின் விளைவாக நடந்த கொலைகளின் எண்ணிக்கையை ஒன்றுசேர்த்துப் பார்த்தால் அவற்றின் எண்ணிக்கை பல ஆயிரங்களை எட்டி விடுகின்றது. இப்போது என்னிடம் இது தொடர்பான உண்மையான புள்ளி விபரங்கள் இல்லை. ஆனால் பத்திரிகைகளைப் படிப்பதன் மூலம் தெரிய வருவது என்னவென்றால், நாள்தோறும் பலர் கொல்லப்படுகின்றனர். இதை தவிர தற்கொலை குண்டு வெடிப்புகள் மூலம் நூற்றுக்கணக்கில் – நூறுகளையும் தாண்டி இப்போது ஆயிரக்கணக்கில் மக்கள் கொலை செய்யப்படுகின்றனர். இவையெல்லாம் இறைவனின் பெயராலும் மார்க்கத்தின் பெயராலும் நடக்கின்றது. ஏனென்றால், ருஹமாஉ பைனஹூம் என்று கூறுவதற்கு முன்னதாக அல்லாஹ் மூஃமின்களின் அடையாளமாக அஷித்தாஉ அலல் குஃப்பாரி அவர்கள் காஃபிர்களுக்கு எதிராக கடினமானவர்களாக இருப்பர் என்றும் கூறுகின்றான். எனவேதான் ஆலிம்கள் தங்களது விருப்பத்திற்கேற்ப

எவரையும் காஃபிராக்கி அவருக்கு எதிராக எதை விரும்பினாலும் அதை செய்யலாம் என்று கருதுகின்றனர். அவர்களுக்கு இதற்கான லைசன்ஸ் கிடைத்து விட்டது என்று எண்ணிக் கொள்கின்றனர். இப்படிப்பட்ட எண்ணங்கள் இருந்தால், இத்தகைய தரம் இருந்தால் பிறகு குஃப்ர் ஃபத்வாக்களை கொடுக்கக்கூடியவர்களே அல்லாஹ் மற்றும் தூதரின் கட்டளைக்கேற்ப குஃப்ர் ஃபத்வாக்களின் கீழ் வந்து விடுகின்றனர். எவ்வாறிருப்பினும், பாகிஸ்தானில் பொதுமக்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் சண்டையில்லை என்ற வகையில் வெளிப்படையாக பார்க்கும் போது அங்கு அமைதியான நிலைமை இருக்கின்றது. ஆனால் எந்த நாடுகளில் போரின் நிலைமை இருக்கின்றதோ, எங்கு எதிரிகளின் இராணுவமும் கொடுமைகளை இழைத்துள்ளதோ அங்கு முஸ்லிம்களே முஸ்லிம்களைக் கொல்கின்றனர்.

உதாரணமாக, ஆஃப்கானிஸ்தானை ஆய்வு செய்து பாருங்கள். அங்கு முஸ்லிம்கள் தான் பரஸ்பரம் ஒருவர் மற்றவருக்கு எதிராக படையைத் திரட்டுவது, தற்கொலை தாக்குதலை மேற்கொள்வது, பொதுவாக தாக்குதல் நடத்துவது ஆகிய செயல்களில் ஈடுபட்டிருக்கின்றனர். இதன் காரணமாக ஆஃப்கானிஸ்தானில் கடந்த 10 வருடங்களில் ஏறக்குறைய 50,000 பேர்களை விட அதிகமானோர் மரணித்து விட்டனர் என்று கூறப்படுகிறது. மரணித்தவர்களில் பிற நாடுகளைச் சார்ந்த இராணுவ வீரர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு தான். மரணித்தவர்களில் ஆஃப்கானிஸ்தான் நாட்டைச் சார்ந்த இராணுவ வீரர்களின் எண்ணக்கையும் குறைவு தான். ஆனால் மரணித்த குடிமக்களின் எண்ணிக்கை மிகவும் அதிகமாகும். இந்த அப்பாவிகள் வீட்டில் இருந்தவாறு அல்லது கடைவீதியில் சென்றவாறு தங்களது மக்களின் கொடுஞ்செயலுக்கு பலியாகி விட்டனர். சிரியாவில் முழுக்க முழுக்க முஸ்லிம்களே பரஸ்பரம் ஒருவர் மற்றவருக்கிடையில் சண்டையிடுகின்றனர். மிகவும் முன்னெச்சரிக்கையுடன் கணித்துக் கூறுவதாக இருந்தால் இதுவரை 70,000 பேர் கொல்லப்பட்டு விட்டனர் என்று கூறப்படுகிறது. இதில் பெரும்பாலார் அப்பாவிகளான குடிமக்களேயாவர். எகிப்தில் புரட்சியைக் கொண்டு வரப்போவதாகச் சாக்குப்போக்கு கூறி ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டு விட்டனர். லிபியாவில் ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டு விட்டனர். இன்னும் அங்கு மக்கள் கொல்லப்பட்டு வருகின்றனர். ஈராக்கில் 2003 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை 6 இலட்சம் பேர் கொல்லப்பட்டு விட்டனர் என்று கூறப்படுகிறது. போர் நிறுத்தப்பட்ட பிறகும் கூட இதுவரை தற்கொலை குண்டுவெடிப்பு தாக்குதல்கள் மூலம் மக்கள் கொல்லப்பட்டு வருகின்றனர். அல்லது பரஸ்பரம் அவர்களுக்கிடையில் நடக்கும் சண்டையின் காரணமாகவும் அவர்கள் கொல்லப்படுகின்றனர். இப்போது பத்திரிகைகளில் இந்த செய்தியும் வருகிறது. முஸ்லிம் நாடுகளும் தீய சக்திகள் மற்றும் சய்த்தானிய சக்திகளின் கருவிகளாக மாறி இவற்றையெல்லாம் செய்கின்றன. உதாரணமாக, இரண்டு நாட்களுக்கு முன்பு சிரியா தொடர்பாக இந்த செய்தி வந்திருந்தது. அதாவது சவூதி அரேபியா ஐரோப்பாவிலுள்ள ஒரு நாட்டிலிருந்து ஆயுதங்களைப் பெற்று சிரியாவின் அரசாங்கத்திற்கு எதிராக செயல்படும் பிரிவினருக்கு அதை Supply செய்கின்றது. இந்த மக்களில் தீவிரவாதத்தை விரும்பும் மக்களும் உள்ளனர். இவர்களுக்கு ஆட்சி கிடைத்து விட்டால் பொதுமக்கள் மேலும் கொடுமையின் ஆட்டுரலில் அரைக்கப்படுவர். இதுதுான் எகிப்தில் நமக்கு தென்படுகிறது. நாட்டின் பொதுமக்கள் மட்டும் இதில் பாதிக்கப்படுவதில்லை. மாறாக அந்தப் பகுதியின் அமைதியே இதன் காரணமாக அழிந்து விடும். இது மட்டுமல்ல. பிறகு அஷித்தாஉ அலல் குஃப்பார் என்ற பெயரில் இவர்கள் உலகின் அமைதியையும் சீர்குலைக்க முயற்சி செய்வர். சரியான இஸ்லாமிய போதனை என்னவென்றால், முஸ்லிம் நாடுகள் ஏதாவதொரு முஸ்லிம் நாட்டில் அநீதியிழைக்கப்படுவதைப் பார்த்தால் இஸ்லாமிய அமைப்பு அந்நியர்களை இடையில் நுழைய விடாமல் பேச்சுவார்த்தை மூலமாக அமைதியை நிலைநாட்டவும் பொதுமக்களின் உரிமையைப் பெற்றுத் தரவும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். நிச்சயமாக இதை செய்ய முடியும். சிரியாவில் இதற்கு முன்பு அலவிகள், மற்றவர்கள் மீது அநீதியிழைத்துக் கொண்டிருந்தனர். இப்போது இதற்கு நேர்மாற்றமாக நடக்கின்றது. இதன் காரணமாக முஸ்லிம் நாடுகளுக்கிடையில் இரண்டு அணிகள் உருவாகி விட்டன. அவை அந்த பகுதிக்கு ஆபத்தாக ஆகிக் கொண்டிருக்கின்றன. எனவே இப்போது உலகப்போர் நடந்தால் அதன் துவக்கம் கிழக்கத்திய நாடுகளிலிருந்துதான் இருக்கும். கடந்த நாட்களில் நடந்தது போன்று அது ஐரோப்பாவிலிருந்து ஆரம்பமாகாது. எனவே முஸ்லிம் நாடுகள் தங்களது பொறுப்புகளைப் புரிந்து கொள்ள வேண்டும். அந்தோ! முஸ்லிம் பொதுமக்களும், ஆட்சியாளர்களும், ஆலிம்களும், அரசியல்வாதிகளும் திருக்குர்ஆனின் இந்த கட்டளையைச் செயல்படுத்தக் கூடியவர்களாக இருக்க வேண்டும்.

**அல்லாஹ் கூறுகின்றான்:**

إِنَّمَا الْمُؤْمِنُونَ إِخْوَةٌ فَأَصْلِحُوا بَيْنَ أَخَوَيْكُمْ وَاتَّقُوا اللَّهَ لَعَلَّكُمْ تُرْحَمُونَ

*நம்பிக்கையாளர்கள் சகோதரர்கள் ஆவர். எனவே உங்களது இரண்டு சகோதரர்களுக்கிடையில் நீங்கள் சமாதானத்தை ஏற்படுத்துங்கள். உங்களுக்கு கருணை காட்டப்படுவதற்கு நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். (49:11)*

இந்த மக்கள் தக்வாவை மேற்கொண்டு நடந்திருந்தால், பரஸ்பரம் ஒருவர் மற்றவருடன் கருணை உணர்வுடன் நடந்து கொண்டால், ருஹமாஊ பைனஹும் அவர்கள் தமக்கிடையே கருணையுடன் நடந்து கொள்வர் என்பதற்கேற்ப செயல்பட்டிருந்தால் இறைவனின் கருணையைப் பெற்றிருப்பர். அல்லாஹ் எங்கு முஸ்லிம்களுக்கு ருஹமாஊ பைனஹும் என்ற கட்டளையைக் கூறியுள்ளானோ அதே வசனத்தின் இறுதியில் நற்செயல்களைச் செய்கின்ற மூஃமின்களுக்கே மகத்தான நற்கூலிக்கான வாக்குறுதியை வழங்கியுள்ளான். கிளர்ச்சி மற்றும் பெயர்தாங்கி போர்கள் நடந்து வரும் நாடுகளில்தான் கொலைகள் நடைபெறும் நிலை இருந்து வருகின்றது. பெயர்தாங்கி போர்கள் என்று நான் கூறியதற்கு காரணம், சில பெரும் சக்திகள் மற்றும் சில பெரிய நாடுகளின் இராணுவமும் வலுக்கட்டாயமாக தங்களது ஆதிக்கத்தை நிரூபிப்பதற்காக அங்கு கூடாரமிட்டுத் தங்கியுள்ளனர். போருக்கான சூழலை ஏற்படுத்தியிருக்கின்றனர். நாங்கள் இந்தப் பகுதியில் அமைதியை ஏற்படுத்த வந்துள்ளோம் என்று அவர்கள் கூறுகின்றனர். ஆனால் முஸ்லிம்களும் முதலில் அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப ருஹமாஊ பைனஹும் என்பதற்கேற்ப செயல்பட்டிருந்தால், ஏதாவதொரு காரணத்தால் குழப்பம் ஏற்பட்டு போரின் நிலை உருவாகினாலும் கூட, *உங்களது இரு சகோதரர்களுக்கிடையில் சமாதானத்தை ஏற்படுத்துங்கள்* (49:11) என்ற கட்டளைக்கு ஏற்ப செயல்பட்டிருந்தால் இடையில் மற்றவர்கள் வருவதற்கான தேவை இருந்திருக்காது. அதற்கான தைரியமும் அவர்களுக்கு இருந்திருக்காது. எவ்வாறிருப்பினும், இந்தப் போர் மற்றும் குழப்பத்தில் ஈடுபட்டுள்ள நாடுகளின் நிலைமை வெளிப்படையாகத் தெரிகிறது. ஆனால் எந்த நாடுகளில் வெளிப்படையாகப் பார்க்கும் போது அமைதி நிலவுவதாகத் தெரிகிறதோ அங்கும் கூட முஸ்லிம்கள் முஸ்லிம்களின் கழுத்துக்களை வெட்டுகின்றனர்.

வங்காள தேசத்தைப் பாருங்கள். அங்குள்ள அரசாங்கம் ஒருவருக்கு எதிராக சட்டரீதியாக நடவடிக்கை எடுத்தால், சட்டரீதியாக ஒருவருக்கு தண்டனை வழங்கப்பட்டால் அல்லது ஒரு தலைவருக்கு தண்டனை வழங்கப்பட்டால் அவர் மீது அனுதாப உணர்வு கொண்டிருப்பவர்களும், ஆதரவாளர்களும் கொதித்தெழுந்து விடுகின்றனர். பிறகு அடிதடி ஆரம்பமாகி விடுகிறது. தீவிரவாத செயல்களைச் செய்வது ஆரம்பமாகி விடுகிறது. இதனால் அப்பாவி மக்கள் கொல்லப்படுகின்றனர். இது எந்த இஸ்லாம்? திருக்குர்ஆனின் எந்த போதனைக்கேற்ப இந்த முஸ்லிம்கள் செயல்படுகின்றனர்? நீங்கள் ஆய்வு செய்து பார்த்தால் இப்போது அநீதியும் காட்டுமிராண்டித்தனமும் முஸ்லிம் நாடுகளில் தான் எல்லாவற்றையும் விட அதிகமாக இருக்கின்றது என்பது தெரிய வரும். அல்லது இஸ்லாத்தின் பெயரில் முஸ்லிம்கள் இந்த செயல்களில் ஈடுபட்டுள்ளனர். இது முஸ்லிம்களின் அல்லது பெயர்தாங்கி முஸ்லிம்களின் துர்பாக்கிய நிலைமையாகும். ஏனென்றால் அல்லாஹ் உண்மையான முஸ்லிமிற்கான அடையாளமாக கூறியிருப்பது அவருக்கு அல்லாஹ்வுடனுள்ள தொடர்பின் காரணமாக அவனது படைப்பினங்களுடன் வலுவான தொடர்பிருக்கும் என்பதேயாகும். பிறகு குறிப்பாக ஒரு முஸ்லிமுக்கும் இன்னொரு முஸ்லிமுக்கும் இடையில் குறிப்பான சகோதரத்துவ உறவு நிலைபெற்று விடும். இது துர்பாக்கிய நிலை இல்லையென்றால் வேறென்ன? எந்த அளவு நற்செயல்களை செய்வதன் பக்கம் இஸ்லாம் கவனமூட்டியிருக்கின்றதோ அமைதி, அன்பு, நேசம், ஆகியவற்றின் வழிகளில் செல்வதற்கு இஸ்லாம் கவனமூட்டியுள்ளதோ அதே அளவு முஸ்லிம்கள் சீர்குலைந்து விட்டனர். அதே அளவு இவர்களில் கொடுமை இழைப்பவர்கள் உருவாகின்றனர். கிறிஸ்தவ நாடுகளில் பார்த்தாலும் அங்கும் கூட முஸ்லிம்கள்தான் குழப்பத்திற்கு காரணமாக இருப்பவர்கள் என்று கூறப்படுகின்றது. அந்த நாடுகளிலுள்ள சிறைச்சாலைகளிலும் கூட ஜனத்தொகை அடிப்படையில் பார்த்தால் முஸ்லிம் கைதிகளே அதிகமாக உள்ளனர் என்று கூறப்படுகிறது. முஸ்லிம்களின் இந்த சீர்குலைந்து போன நிலைமையை சரிசெய்வதற்காகவே வாக்களிக்கப்பட்ட மஸீஹ் வரவேண்டியதிருந்தது. அவர் வந்து விட்டார். ஆனால் எங்களுக்கு எந்த சீர்திருத்தவாதியின் தேவையும் இல்லை.

எந்த மஸீஹின் தேவையும் இல்லை. நமக்காக இருக்கும் இந்த போதனைகளே போதுமானது என்று இவர்கள் கூறுகின்றார்கள்.

போதனைகள் போதுமானதுதான் என்றால் ஆலிம்கள் தங்களது தற்பெருமைக்காகவும் சுய நோக்கங்களுக்காகவும் பல்வேறு விதமான பிரிவுகளை ஏன் ஏற்படுத்தியிருக்கின்றனர்? அவர்கள் இவர்களை சரியான இஸ்லாமிய போதனைகளுக்கேற்ப ஏன் வழிநடத்திச் செல்லவில்லை? ஏன் இந்த அளவு பிரிவினைக் கூட்டங்கள் உள்ளன? அவர்களில் ஒருவர் மற்றவரை அறுப்பதற்கும் வெட்டுவதற்கும் ஏன் முயற்சி செய்கின்றனர்? ஏன் அல்லாஹ்வின் இந்த கட்டளையைப் பற்றிய அறிவு அவர்களுக்கு இல்லை. தங்களைப் பின்பற்றுபவர்களிடம் இதைப் பற்றிய அறிவை இவர்கள் ஏன் வழங்கவில்லை?

இவர்களுக்கு இறைவனைப் பற்றிய அச்சமும் இல்லை. மறுமை நாளில் நிகழும் கேள்வி கணக்கு தொடர்பாகவும் எந்த அச்சமும் இவர்களுக்கு இல்லை. அப்பாவிகளான மார்க்கத்தை விட்டு விலகியுள்ள பொதுமக்களை தங்கள் மனம்போன போக்கில் அவர்கள் உருவாக்கியுள்ள போதனைகள் மற்றும் விளக்கங்கள் ஆகியவற்றைக் கூறுவதன் மூலம் ஏமாற்றிக் கொண்டே செல்கின்றனர். இந்த தலைவர்களும், இந்த ஃபத்வா கொடுப்பவர்களும் உலகம் உள்ள வரை நீடித்திருக்கின்ற ஆலிம்கள் என்று தங்களை கூறிக் கொள்கின்ற இவர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது இந்த மகத்தான தூதுச் செய்தியை மறுத்து விட்டனர். பெருமானார் (ஸல்) அவர்கள் உம்மத்திற்கு வழங்கியுள்ள இந்த தூதுச் செய்தியை மறக்கக் கூடாது. மாறாக இதனை எடுத்துக் கூறிக் கொண்டே இருக்க வேண்டும் என்று கூறியிருந்தார்கள். அதனை இவர்கள் மறந்து விட்டனர். இன்னும் சொல்வதென்றால் அவர்கள் அதை மறக்கவில்லை. மாறாக தங்களது சுய பலன்களுக்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது இந்த தூதுச்செய்தியை தங்களது முதுகிற்குப் பின்னால் எறிந்து விட்டு, பெருமானார் (ஸல்) அவர்களது போதனைக்கு எவ்வித முக்கியத்துவமும் வழங்காமல் இருப்பதன் காரணத்தால் நிச்சயமாக இவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை இழிவுபடுத்தும் செயலைச் செய்துள்ளனர்.

**பெருமானார் (ஸல்) அவர்கள் தமது ஹஜ்ஜத்துல் விதாவின் சந்தர்ப்பத்தில் மிகவும் தெளிவாக இவ்வாறு கூறியிருந்தார்கள்:**

இன்று இந்த நாளும், இந்த நகரமும், இந்த மாதமும் எந்த அளவு கண்ணியத்திற்குத் தகுதி உடையவையாக இருக்கின்றதோ அவ்வாறே பிறரது இரத்தமும், செல்வமும், கண்ணியமும் உங்கள் மீது ஹராம் ஆகும். அவை கண்ணியத்திற்கு உரியவையாக உள்ளன. விரைவில் நீங்கள் உங்கள் இறைவனை சந்திப்பீர்கள். அவன் உங்களிடம் நீங்கள் எவ்வாறு செயலாற்றுகின்றீர்கள்? என்று கேட்பான். பாருங்கள்! எனக்குப் பிறகு மீண்டும் காஃபிராக ஆகி விடாதீர்கள். உங்களில் ஒருவர் மற்றவரது கழுத்தை வெட்டுபவர்களாக ஆகிவிட வேண்டாம். தெரிந்து கொள்ளுங்கள். உங்களில் இங்கு இருப்பவர் இங்கு வராதவருக்கு இந்த தூதுச் செய்தியை எட்ட வையுங்கள். எவருக்கு தூதுச் செய்தி எட்ட வைக்கப்படுகின்றதோ அவர் அதனை கேட்டவரை விட சிறந்த முறையில் புரிந்து கொள்பவராக இருக்கலாம். பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் என்ன! நான் அல்லாஹ்வின் தூதுச்செய்தியை சரியாக உங்களுக்கு எட்ட வைத்து விட்டேனா? என்று கேட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த சொற்களை மூன்று முறை திரும்பத் திரும்ப கூறினார்கள். ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களது அறிவிப்பாகும் இது.

அவர்கள் கூறுகின்றார்கள்: நாங்கள் அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நீங்கள் அல்லாஹ்வின் தூதுச் செய்தியை சரியான முறையில் எட்ட வைத்து விட்டீர்கள் என்று கூறினோம். பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள், அல்லாஹ்வே! நீ இதற்காக சாட்சியாக இரு என்று கூறினார்கள். இந்த தூதுச்செய்தி தான் இவர்களுக்கு கிடைத்திருக்கின்றது. இந்த பெயர்தாங்கி ஆலிம்களிடம் அநீதி மற்றும் கொடுமைகளைக் கட்டவிழ்த்து விடுவதற்கும் மார்க்கத்தின் பெயரால் பரஸ்பரம் ஒருவர் மற்றவரது கழுத்தை வெட்டுவதற்கும் இவர்களிடம் பெருமானார் (ஸல்) அவர்களது இந்த தெளிவான கட்டளைக்குப் பிறகு வேறு என்ன எஞ்சியிருக்கின்றது? இந்தக் கட்டளையை செயல்படுத்தாமல் இதை அவமதிப்பதன் மூலம் இவர்களே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை இழிவுபடுத்தக் கூடியவர்களாக ஆகிவிடவில்லையா?

பிறகு **பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:** எந்த முஸ்லிமின் நாவிலிருந்தும் கையிலிருந்தும் மற்ற முஸ்லிம்கள் பாதுகாப்பாக இருக்கின்றாரோ அவர்தான் முஸ்லிம் ஆவார்.

தங்களை முஸ்லிம்கள் என்று கூறிக்கொள்கின்ற இன்றைய நாட்களில் இருக்கின்ற ஆலிம்கள் முஸ்லிம் என்பதற்கான இந்த விளக்கத்தின் கீழ் வர முடியுமா? சட்டரீதியான காரணங்களால் அஹ்மதிகளை அவர்கள் இஸ்லாத்தின் வட்டத்திலிருந்தும் வெளியேற்றி விட்டார்கள். இந்தப் பணியைச் செய்வதற்காக எல்லாப் பிரிவுகளும் ஒன்றுசேர்ந்தன. எவ்வாறிருப்பினும், எங்களுக்கு இதனால் எந்த பாதிப்பும் ஏற்படாது. எங்களை இறைவன் முஸ்லிம்கள் என்று கூறுகின்றான். நாங்கள் கலிமாவை கூறுகின்றோம். உள்ளத்தால் காத்தமுல் முர்ஸலீனாக இருக்கும் பெருமானார் (ஸல்) அவர்களின் தொண்டர்களாக இருக்கின்றோம். ஆனால் அஹ்மதிகளைத் தவிர இருக்கின்ற ஏனைய பிரிவுகளைச் சார்ந்தவர்களும் இருக்கின்றார்கள். அவர்கள் மீதும் எந்த அளவு கொடுமை இழைக்கப்படுகிறது? என்பதைப் பாருங்கள். ஏன் அவ்வாறு இருக்கின்றது? பாகிஸ்தானிலுள்ள கொய்ட்டாவில் இரண்டு வெவ்வேறு சந்தர்ப்பங்களில் அப்பாவி குழந்தைகளும், பெண்களும் கொலை செய்யப்பட்டனர். எந்த குற்றத்திற்காக அவர்கள் கொல்லப்பட்டனர்? தாம் விரும்பாத பிரிவுடன் அவர்களுக்கு தொடர்பிருந்தது என்பதே இதற்கான காரணமாகும். இந்தப் பிரிவைச் சார்ந்தவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கவில்லை. அவர்கள் பெரும்பான்மையினராக இல்லை. தங்களது கொடுமையின் கரத்தை நீளமானதாக ஆக்குவதற்காக அஹ்மதிகளுக்கு எதிராக எந்த சட்டத்தை இவர்கள் இயற்றினார்களோ அந்தப் பணியில் இவர்கள் எல்லாரும் ஒன்றுசேர்ந்து கொண்டார்கள். இப்போது அதே சட்டம் ஷியாக்களின் மீது திரும்பி விட்டது. அவர்கள் இவர்களது இலக்காக ஆகி விட்டனர். இப்போது இந்த எல்லா பிரிவுகளைச் சார்ந்தவர்களும் பரஸ்பரம் அவர்களில் ஒருவர் மற்றவர் மீது மீண்டும் இந்தக் கொடுமைகளை இழைப்பர். ஒவ்வொரு பிரிவும் மற்ற பிரிவின்மீது கொடுமைகளை இழைக்கின்ற நிலை உருவாகும். மீண்டும் இது நடக்கும் என்று நான் கூறக் காரணம் முதலில் இவ்வாறுதான் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அஹ்மதிகளுக்கு எதிராக மட்டும் இவர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து விட்டனர். ஆனால் நாக்கு ஒரு சுவையை உணர்ந்து விட்டால் அதன் போதை ஏற்பட்டு விட்டால் பிறகு அதற்கு எந்த எல்லையும் இருப்பதில்லை. பிறகு அந்த சுவையிலிருந்தும் இவர்கள் தங்களை தவிர்ந்து கொள்ள முடியாது. இவர்களது வாயில் இரத்தம் படிந்து விட்டது. இவர்களில் ஒருவர் மற்றவரது இரத்தத்தைக் குடிப்பவர்களாக ஆகிவிடுவர். இதுதான் இப்போது நடந்து கொண்டிருக்கின்றது. அஹ்மதிகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது சரியான அந்தஸ்த்தை புரிந்து கொண்டவர்களாக இருக்கின்றனர். எனவே நாம் இந்த நபிமொழியை முஸ்லிம்களுக்கு மட்டும் பொருந்தக்கூடியதாக ஒரு எல்லைக்குள் வைக்க மாட்டோம். மாறாக, எங்களது பார்வையில் இந்த வட்டம் எந்த அளவு விரிவானதாக இருக்கின்றதென்றால் உலகில் அமைதியை விரும்புகின்ற ஒவ்வொரு மனிதனுக்கும் பொருந்தக் கூடியதாக அது இருக்கும்.

**இதன் விரிவான நிலை பற்றி ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

பொதுவாக முஸ்லிம்கள் முஸ்லிம்களிடமிருந்து பாதுகாப்பாக உள்ளனர் என்றே கூறப்படுகிறது. இது முஸ்லிம்களின் எல்லைக்குட்பட்டது மட்டுமல்ல. எந்த முஸ்லிமின் நாவிலிருந்தும் கைகளிலிருந்தும் சாந்தியை விரும்புகின்ற அமைதியை விரும்புகின்ற ஒவ்வொருவரும் பாதுகாப்பாக இருக்கின்றார்களோ அவரே உண்மையான முஸ்லிம் ஆவார். இதுதான் பெருமானார் (ஸல்) அவர்களது கட்டளைகள் தொடர்பாக உண்மையான அறிவாகும். அது தக்வாவை கடைபிடிப்பதன் மூலமாகவே கிடைக்கும். அந்த ஆலிம்களிடம் இந்த தக்வா இல்லை. அவர்கள் தங்களது தற்பெருமை மற்றும் சுயபலன்களைப் பெறுவது ஆகியவற்றில் மூழ்கியிருக்கின்றனர். அதன் விளைவாக இந்த அறிவு, ஞானம் ஆகியவை அவர்களுக்கு கிடைக்வில்லை. எனவே எதுவரை சுயபலன்களை அடைகின்ற இவர்களின் இந்த நிலைமை முடிவுக்கு வராதோ அதுவரை இவர்களில் தியாகம் செய்வதற்கான நிலை உருவாகாது. ருஹமாஊ பைனஹும் அவர்கள் தமக்கிடையில் கருணையுடன் நடந்து கொள்வர் என்பதன் ஆன்மாவை முன்னிறுத்தியவாறு அதற்கேற்ப செயல்படுவதன் மூலமாகத்தான் இவர்களிடம் தியாகம் செய்வதற்கான நிலை உருவாகும். அதுவரை ஒருவர் எவ்வளவு பெரிய ஜிப்பா அணிந்த மனிதராக இருந்தாலும் அவர் அல்லாஹ்வின் பார்வையில் உண்மையான மூஃமின் அல்ல. எவர் உண்மையான மூஃமின் ஆக இல்லையோ அவர் மற்றவர்களுக்கு என்ன வழிகாட்ட முடியும்?

கடந்த சில நாட்களுக்கு முன்பாக பாகிஸ்தானில் ஒரு மவ்லவி சாஹிப் பேட்டி கொடுத்துள்ளார். அதில் அஹ்மதிகள் புரையோடிய புண்ணாக இருக்கின்றார்கள் என்று அவர் கூறியுள்ளார். நாட்டில் அவர்களது நிலை இப்படி இருக்கின்றது என்று அவர் கூறுகின்றாரா? என்று நமக்குப் புரியவில்லை. எவ்வாறிருப்பினும் அஹ்மதிகள் புரையோடிய புண்ணாக இருக்கவில்லை. அஹ்மதிகள் அல்லாஹ்வின் உண்மையான போதனைகளைப் பற்றி உலகிற்கு எடுத்துக் கூறி மக்களை குணப்படுத்தக் கூடியவர்களாக இருக்கின்றார்கள். அஹ்மதிகள் எப்படிப்பட்டவர்கள் என்றால் அவர்கள் கூறுகின்ற விசயங்களைக் கேட்டு முஸ்லிம் அல்லாதவர்களும், இஸ்லாத்திற்கு எதிராக எழுதுபவர்களும், பேசுபவர்களும் கூட உங்களுடைய இஸ்லாத்திற்கும், மற்றவர்களது இஸ்லாத்திற்கும் இடையில் அல்லது மற்ற ஆலிம்களின் இஸ்லாத்திற்கும் இடையில் வித்தியாசம் இருக்கின்றது என்று கூறுகின்றார்கள். இது ஏன்? அப்போது எங்களது இஸ்லாம் ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது இஸ்லாம் ஆகும். எங்களது இஸ்லாம் திருக்குர்ஆனின் போதனைக்கேற்ப இருக்கின்ற இஸ்லாம் ஆகும் என்று நமக்கு கூற வேண்டியது வருகிறது. இதற்கு எதிரில் மவ்லவிகளின் இஸ்லாமானது இவர்களே உருவாக்கிய இஸ்லாம் ஆகும். மதத்தின் பெயரால் இவர்களது சுய நோக்கங்களை பிரதிபலிக்கின்றவையாக அது இருக்கின்றது என்று நாம் கூற வேண்டியது வருகிறது.

அல்லாஹ் முஸ்லிம் உம்மத்தின் கண்களையும் திறப்பானாக! நெஞ்சத்தையும் திறப்பானாக! அவர்களுக்கு உண்மையான இஸ்லாத்தை அடையாளங்கண்டு கொள்ளக் கூடியவர்களாக ஆக்குவானாக! அது இன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது உண்மைப் பேரன்பர் மூலமாக, அன்னாரது உண்மையான அடியாராக இருப்பவர் மூலமாக உலகில் பரவிக் கொண்டிருக்கின்றது.

எவ்வாறிருப்பினும், நான் ஆரம்பத்தில் கூறியது போன்றே இந்த விசயங்களைத் தவிர நாம் நம்மைப் பற்றியும் நாம் எல்லா வகையிலும் ஒவ்வொரு நிலையிலும் *எவற்றை இணைக்க வேண்டும் என்று அல்லாஹ் கட்டளையிட்டுள்ளனோ அவற்றை இணைப்பவர்கள்* என்ற இறை கட்டளைக்கேற்ப செயல்படக் கூடியவர்களாக இருக்கின்றோம் என்பதற்கும் அல்லது ருஹமாஊ பைனஹூம் என்பதற்கான நல்லுதாரணமாக நாம் திகழ்கின்றோம் என்பதற்கும் 100 சதவீதம் உத்தரவாதம் வழங்கிவிட முடியாது. ஒவ்வொருவரும் இதுபற்றி ஆய்வு செய்து பார்த்தால் இதன் பக்கம் கவனம் ஏற்படும். பிறகு அந்த நிலை நமக்கு தென்படும். எனவே நாமும் இவ்விசயத்தில் முழுமை அடைந்து விட்டோம் என்று எண்ணிவிடக் கூடாது. பெரிய அளவில் இல்லையென்றாலும் நமது சுற்றுச்சூழலில் சிறிய அளவிலாவது இத்தகைய நிலை நம்மிடம் தென்பட வேண்டும். சிறிய அளவிலும் இதற்கு மாற்றமான செயல்கள்தான் நம்மிடம் இருக்கின்றதென்றால் அது பிறகு பெரும் சீர்குலைவை ஏற்படுத்தக் காரணமாகி விடும்.

அல்லாஹ்வின் மன்னிப்பும் அவனது கருணையும் நமக்கு கிடைக்க வேண்டும் என்று நாம் விரும்புகின்றோம். ஆனால் மற்றவர்கள் மீது கருணை காட்டுவதற்கம் மற்றவர்களை மன்னிப்பதற்கும் நமக்கு தெரியவில்லை. நாம் கருணையுடன் மற்றவர்களைக் கருத்தில் கொள்பவர்களாக இருந்தால் ஜமாஅத்திலுள்ள பல்வேறு தர்பிய்யத் தொடர்பாக இருக்கும் பிரச்சனைகளும் நீதித்துறையுடன் சம்பந்தப்பட்ட பிரச்சனைகளும் தீர்வுக்கு வந்து விடும்.

**அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்:**

وَلَا يَأْتَلِ أُولُوا الْفَضْلِ مِنْكُمْ وَالسَّعَةِ أَنْ يُؤْتُوا أُولِي الْقُرْبَىٰ وَالْمَسَاكِينَ وَالْمُهَاجِرِينَ فِي سَبِيلِ اللَّهِ ۖ وَلْيَعْفُوا
وَلْيَصْفَحُوا ۗ أَلَا تُحِبُّونَ أَنْ يَغْفِرَ اللَّهُ لَكُمْ ۗ وَاللَّهُ غَفُورٌ رَحِيمٌ

*அவர்கள் மன்னிக்க வேண்டும். கண்டும் காணாமல் விட்டுவிட வேண்டும். அல்லாஹ் உங்களை மன்னிக்க வேண்டும் என்பதை நீங்கள் விரும்புவதில்லையா? அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும் மீண்டும் மீண்டும் கருணை காட்டுபவனுமாவான். (24:23)*

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இது தொடர்பாக ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

மக்களது பாவங்களை மன்னியுங்கள். அவர்கள் இழைக்கின்ற துன்பங்களையும் செய்யும் தவறுகளையும் மன்னித்து விடுங்கள். இறைவனும் உங்களை மன்னிக்க வேண்டும் என்பதையும் உங்கள்

பாவங்களை அவன் மன்னிக்க வேண்டும் என்பதையும் நீங்கள் விரும்புவதில்லையா? அவன் மிக்க மன்னிப்பவனும் மீண்டும் மீண்டும் கருணை காட்டுபவனுமாவான். எனவே அல்லாஹ்வின் மன்னிப்பைப் பெற விரும்பாத யார் தான் இருக்க முடியும்?

அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைத்திருக்கின்ற ஒவ்வொரு நபரும் – அவருக்கு இந்த உலகிலும் இறைவனது அருளும் கருணையும் தேவைப்படுகிறது. மறு உலகிலும் அவனது அருளும் கருணையும் தேவைப்படுகிறது. அப்படிப்பட்டவர் அல்லாஹ் தமது தவறுகளை மன்னிக்க வேண்டும் என்பதில் பேரார்வம் கொண்டவராக இருப்பார். நீங்கள் இதை விரும்புகின்றீர்கள் என்றால் எனது இந்தப் பண்பை மேற்கொள்ளுங்கள். எனது அடியார்களுடன் உங்களுக்கு இருக்கும் தொடர்புகளில் கருணையின் உணர்வுகளை மேலும் மேலும் அதிகமாக மிகைத்து நிற்கும்படி செய்யுங்கள் என்று அல்லாஹ் கூறுகின்றான்.

இந்தக் கருத்து தொடர்பான சில ஹதீஸ்களை நான் உங்களுக்கு எடுத்துக் கூறுவேன். இந்த ஹதீஸ்கள் இந்த கருத்திற்கு மேலும் பொலிவூட்டக்கூடியதாக இருக்கின்றது.

**ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அறிவிக்கின்றார்கள். நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறுவதைக் கேட்டேன். அவர்கள் கூறினார்கள்:**

எவர் ரிஸ்கில் விரிவான நிலை உருவாக வேண்டும் என்று விரும்புகின்றாரோ, மேலும் அவரது வயதும் அவரைப் பற்றிய நல்ல விசயங்கள் எடுத்துக் கூறப்படுவதும் அதிகமாக இருக்க வேண்டும் என்று விரும்புகின்றாரோ அவர் இரத்த உறவுகளை பேணுகின்ற நல்லொழுக்கத்தைக் கடைபிடிக்க வேண்டும். தமது உறவினர்களுடனும் தமக்கு நெருக்கமானவர்களுடனும் நல்ல தொடர்பை நிலைநாட்ட வேண்டும். அவர்களது குறைகளை மன்னிக்க வேண்டும்.

**ஹஸ்ரத் அமர் பின் சுஹைப் (ரலி) தன் தகப்பனாரிடமிருந்தும் பாட்டனாரிடமிருந்தும் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:**

எவர் தம்மை விட சிறியவராக இருப்பவர் மீது கருணை காட்டாமலும் தம்மை விட பெரியவராக இருப்பவரை மதிக்காமலும் இருக்கின்றாரோ அவர் நம்மைச் சார்ந்தவர் இல்லை. அதாவது அவருக்கு கண்ணியம் அளிக்காமல் இருந்தால் அவருக்கு நம்முடன் எந்தத் தொடர்பும் இல்லை என்று கூறுகின்றார்கள். சிறு வயதில் இந்த ஹதீஸை பலமுறை படித்திருக்கினறோம். இங்கும் வகுப்புகளில் அந்த ஹதீஸ் கற்றுத் தரப்படுகிறது. பலமுறை அது கூறப்பட்டிருக்கின்றது. நாம் அதை கேட்கின்றோம். ஆனால் அதைக்கேட்ட பிறகும் பள்ளிவாசலை விட்டு வெளியேறியதும் அல்லது மாநாட்டுத் திடலை விட்டு வெளியே வந்தவுடன் அதை நாம் மறந்து விடுகின்றோம்.

**ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது (ரலி) அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

அனைத்து படைப்பினங்களும் அல்லாஹ்வின் குடும்பமாகும். அவனது படைப்பினங்களில் யார் அவனது குடும்பத்தினருடன் நல்ல முறையில் நடந்து கொள்கின்றார்களோ அவர்களது தேவைகளை கருத்தில் கொள்கின்றாரோ அவரே அவனது படைப்பினங்களில் அவன் மிகவும் விரும்பக்கூடியவராக இருப்பார்.

ஒருவர் மற்றவருக்காக தியாகம் செய்யக்கூடிய ஆன்மாவை உடையவராகவும் கருணையின் உணர்வுகளைக் கொண்டவராகவும் அவருக்காக வேதனைப்படக் கூடியவராகவும் அவர் மீது நேசம் கொண்டவராகவும் இருந்தால் தான் அவரால் பிறரது தேவைகளைக் கருத்தில் கொள்ள முடியும்.

**ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி) அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

கருணை காட்டுபவர் மீது ரஹ்மானாகிய இறைவன் கருணை காட்டுவான். நீங்கள் பூமியில் உள்ளவர்கள் மீது கருணை காட்டுங்கள். அல்லாஹ் வானத்தில் உங்கள் மீது கருணை காட்டுவான்.

**ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

எவர்களிடம் இந்த மூன்று அம்சங்கள் இருக்குமோ அல்லாஹ் அவரை தனது பாதுகாப்பிலும் தனது கருணையின் கீழும் வைப்பான். மேலும் அவரை சுவர்க்கத்தில் நுழைத்து விடுவான்.

முதலாவது, அவர் பலவீனமாக இருப்பவர்கள் மீது கருணை காட்ட வேண்டும். இரண்டாவது, அவர் தமது தாய் மற்றும் தந்தையரை நேசிக்க வேண்டும். மூன்றாவது, அவர் தனது ஊழியர்களிடமும் பணியாளர் களிடமும் நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டும்.

**ஹஸ்ரத் ஆயிசா ஸித்தீகா ரலியல்லாஹு அன்ஹா அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

அல்லாஹ் மென்மையாக நடந்து கொள்பவனாவான். மென்மையை விரும்பக் கூடியவனாக இருக்கின்றான். மென்மையாக நடந்து கொள்வதற்கு எந்த அளவு நற்கூலி வழங்குகின்றானோ அந்த அளவு கடினமாக நடந்து கொள்வதற்கு வழங்குவதில்லை. வேறு எந்தவொரு நன்மைக்கும் இந்த அளவு அவன் நற்கூலி வழங்குவதில்லை.

எவை மென்மையாக நடந்து கொள்வதன் மூலமாக தீர்வுக்கு வந்து விடுமோ அவற்றை மென்மையைப் பேணுவதன் மூலம் தீர்வுக்கு கொண்டு வந்து விட வேண்டும்.

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியதாக ஹஸ்ரத் ஆயிசா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

எந்த விசயத்தில் மென்மையும் பரிவும் இருக்குமோ அந்த அளவு அது அவ்விசயத்தை அழகானதாக ஆக்கி விடும். எதிலிருந்தும் மென்மை பிடுங்கப்பட்டு விடுமோ அது அந்த அளவு தீய தோற்றத்தை உடையதாக ஆகி விடும். கடினமாக நடந்து கொள்வது தீய தோற்றத்தை ஏற்படுத்தி விடுகின்றது. செயலையும் அது அழகற்றதாக ஆக்கி விடுகிறது. அப்படிப்பட்ட நபரை விட்டும் விலகி மக்கள் வெகுதூரம் சென்று விடுவர். அதாவது மென்மையாகவும் பரிவுடனும் நடந்து கொள்வதில்தான் அழகு இருக்கின்றது.

பிறகு இப்னு மஸ்வூது அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நெருப்பு யார் மீது ஹராமாக்கப்பட்டுள்ளது என்பதை நான் உங்களுக்குக் கூறட்டுமா? என்று கேட்டார்கள். பிறகு கூறினார்கள். மக்களுக்கு அருகில் இருக்கின்ற நபர் மீது அது ஹராமாகும். அதாவது அவர் மக்களை வெறுக்கமாட்டார். அவர்களுடன் மென்மையாக நடந்து கொள்வார். அவர்களுக்கு எளிதானவற்றை ஏற்படுத்துவார்.

நான் இதுபற்றி பொறுப்பாளர்களுக்கு குறிப்பாக கவனமூட்ட விரும்புகின்றேன். இந்த நல்ல உணர்வு, கருணையன் உணர்வு ஒவ்வொரு பொறுப்பாளரிடமும் குறிப்பாக ஜமாஅத்தின் பொறுப்பாளர்களிடம் இருக்க வேண்டும். ஆனால் ஜமாஅத்திற்குத் தொண்டு செய்கின்ற ஜமாஅத் பொறுப்பாளர்கள் குறிப்பாக தன்னிடம் எதையாவது கேட்கின்ற ஒரு நபரைப் பார்த்து, தனது அலுவலகத்திற்கும் மீண்டும் மீண்டும் அவர் வருவதைப் பார்த்து ஒருபோதும் சோர்வடைந்து விடக்கூடாது. எப்போதும் திறந்த உள்ளத்துடன் அவரை வரவேற்க வேண்டும்.

ஜமாஅத்தின் எந்தவொரு பணியாளரும் எவ்வகையிலும் உயர்வான நல்லொழுக்கத்தைப் பேணுவதிலிருந்தும் அவர் விலகிச் சென்று விடக்கூடாது என்பதை எப்போதும் அவர் நினைவில் வைக்க வேண்டும். உயர்வான நல்லொழுக்கத்தை அவர் வெளிப்படுத்திக் காட்டவில்லை என்று சிறிதளவு கூட சந்தேகப்படுகின்ற எந்த நிலையும் இருக்கக் கூடாது. எவ்வளவு அதிகமாக மென்மையாகப் பேச முடியுமோ அந்த அளவுக்கு அதிகமாக மென்மையாகப் பேசவும் எந்த அளவு வசதிகளை செய்து தர முடியுமோ அந்த அளவு வசதிகளைச் செய்து தரவும் முயற்சி செய்ய வேண்டும்.

**ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

சதகா கொடுப்பதால் செல்வத்தில் குறைவு ஏற்படாது. எவர் மற்றவர்களது தவறுகளை மன்னித்து விடுகின்றாரோ அல்லாஹ் அவருக்கு மேலும் கண்ணியத்தை வழங்குகிறான். ஒருவரது தவறுகளை மன்னிப்பதன் விளைவாக எந்த அவமரியாதையும் ஏற்படாது. இந்த தரம் நமது ஜமாஅத்திலுள்ள ஒவ்வொருவரிடமும் நிலைபெற்று விடும்படி அல்லாஹ் செய்வானாக!

**பிறகு ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

எவரிடமும் காழ்ப்புணர்ச்சியுடன் நடந்து கொள்ள வேண்டாம். எவர் மீதும் பொறாமை கொள்ள வேண்டாம். எவரிடமிருந்தும் முகத்தைத் திருப்பிக் கொள்ள வேண்டாம். எவரிடமும் உறவைத் துண்டித்துக் கொள்ள வேண்டாம். பரஸ்பரம் ஒருவர் மற்றவருடன் வைத்திருக்கும் தொடர்பை முறித்துக் கொள்ளாதீர்கள். மாறாக, அல்லாஹ்வின் அடியார்களாகவும் ஒருவர் மற்றவரது சகோதரராகவும் ஆகி விடுங்கள். ஒரு முஸ்லிம் தனது சகோதரனிடம் மூன்று நாட்களுக்கும் அதிகமாக வெறுப்புடன் இருப்பதும் அவருடன் உள்ள உறவை முறித்துக் கொள்வதும் ஆகுமானதல்ல.

**ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

உங்களில் ஒருவர் மற்றவர் மீது பொறாமை கொள்ளாதீர்கள். உங்களில் ஒருவர் மற்றவருக்கு இழப்பை ஏற்படுத்துவதற்காக பொருள்களின் விலையைக் கூட்டி விற்காதீர்கள். ஒருவர் மற்றவர்மீது காழ்ப்புணர்ச்சியுடன் நடந்து கொள்ள வேண்டாம். ஒருவர் மற்றவரிடமிருந்து முகம் திருப்பியவாறு செல்ல வேண்டாம். அதாவது அவருடன் எவ்வித தொடர்பும் வைக்காமல் இருக்க வேண்டாம். உங்களில் ஒருவரது வியாபாரத்தின் மீது மற்றவர் வியாபாரம் செய்ய வேண்டாம். அல்லாஹ்வின் அடியார்களாகவும் உங்களில் ஒருவர் மற்றவரது சகோதரராகவும் ஆகி விடுங்கள். ஒரு முஸ்லிம் தனது சகோதரனுக்கு அநீதியிழைக்கமாட்டார். அவர் வெட்கப்படும் வகையில் அவரை இழிவிற்கு ஆளாக்க மாட்டார். பெருமானார் (ஸல்) அவர்கள் தனது நெஞ்சை சுட்டிக் காட்டியவாறு தக்வா இங்கிருக்கின்றது என்று கூறினார்கள். இந்த சொற்களை பெருமானார் (ஸல்) அவர்கள் மூன்று முறை கூறினார்கள்.

**பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

மனிதனின் துர்பாக்கிய நிலைக்கு அவன் தனது முஸ்லிம் சகோதரனை அற்பமாகப் பார்ப்பதே போதுமானதாகும். ஒவ்வொரு முஸ்லிமின் இரத்தமும், செல்வமும், கண்ணியமும் மற்ற முஸ்லிமின் மீது ஹராம் ஆகும். அவை கண்ணியப்படுத்த வேண்டியவையாகும்.

பெருமானார் (ஸல்) அவர்களது உள்ளத்தில் எல்லாரையும் விட அதிகமாக இருந்த அந்த தக்வாவை அவர்களது முன்மாதிரியைப் பின்பற்றிச் செல்ல முயற்சி செய்தவன் மூலம் அந்தத் தக்வாவை நாம் ஒவ்வொருவரும் பெற முயற்சி செய்பவர்களாக ஆவதற்கு அல்லாஹ் உதவுவானாக!

**ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

அல்லாஹ் கியாமத் நாளன்று கூறுவான். எனது கம்பீரம் மற்றும் எனது மகிமையைக் கருத்தில் கொண்டவாறு தங்களுக்கிடையே அன்பு வைத்திருந்த அந்த மக்கள் எங்கே? இன்று எனது நிழலைத் தவிர வேறெந்த நிழலும் இல்லாத நிலையில் நான் அவர்களுக்கு எனது கருணையின் நிழலின்கீழ் இடம் அளிப்பேன் என்று அல்லாஹ் கூறுவான்.

நமக்கிடையிலுள்ள தொடர்புகளை அன்பு, நேசம் ஆகியவற்றின் உணர்வுகள் மூலம் வெளிப்படுத்துபவர்களாகவும் ஒருவர் மற்றவர் மீது காட்டுகின்ற கருணையை அதிகப்படுத்துபவர்களாகவும் அல்லாஹ் நம்மை ஆக்குவானாக! ஹஸரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஆகியோரது போதனைகளின் ஒளியில் அவர்கள் விரும்பிய அந்த ஜமாஅத்தாக நாம் ஆகி விடுவோமாக! உலகின் அமைதிக்கும் உத்தரவாதம் வழங்கக்கூடிய ஜமாஅத்தாக அஹ்மதிய்யா ஜமாஅத் ஆகட்டும்! முஸ்லிம்கள் ஹஸரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது உண்மையான அடியாரை ஏற்றுக் கொண்டு அவர்கள் பரஸ்பரம் தமக்கிடையில் அன்பு, நேசம் கொள்பவராக ஆவதன் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்பவர்களாக ஆகட்டும்! தங்களது நாட்டிலுள்ள மக்கள் மீது கொடுமையிழைக்கின்ற முஸ்லிம் தலைவர்கள் அதை நிறுத்தி விட்டு தங்களது குடிமக்களுடன் நீதியுடனும் கருணையுடனும் நடந்து கொள்பவர்களாக ஆகட்டும்! பொதுமக்களும் சுயநலத்தை அடைவதையே குறிக்கோளாகக் கொண்டவர்களது கைப்பொம்மையாக ஆகிவிடாமல் அவர்களது கருவியாக ஆகி விடாமல் அறிவுடன் செயல்பட்டு இறைவனின் சரியான கட்டளைகளைத் தேட வேண்டும். அதற்கேற்ப செயல்பட முயற்சி செய்ய வேண்டும். முஸ்லிம் நாடுகளை எத்தகைய அபாயகரமான தீவிரவாதத்தை விரும்புகின்ற பிரிவினர் தங்களது பிடியின் கீழ் கொண்டு வந்துள்ளார்களோ அப்படிப்பட்ட சுய நோக்கங்களுக்கு மட்டுமே முன்னுரிமை வழங்ககக் கூடியவர்களாக இருக்கின்றனர். இவர்களது பிடியிலிருந்து குறிப்பாக முஸ்லிம்களுக்கும் பொதுவாக உலகிற்கும் அல்லாஹ் இரட்சிப்பை வழங்குவானாக! அதன் மூலம் நாம் இஸ்லாத்தின் அழகிய போதனைகளை மிகவும் சிறந்த முறையிலும் மிகவும் வேகமாகவும் உலகில் பறக்க வேண்டும். அல்லாஹ் நமக்கு இதற்கான நல்வாய்ப்பினை வழங்குவானாக!

இன்று ஜுமுஅவிற்குப் பிறகு ஒரு ஜனாஸா காயிப் தொழுகையைத் தொழ வைப்பேன். இந்த ஜனாஸா காயிப் மதிப்பிற்குரிய நாஸிரா சலிமா ரிஸா சாஹிபா உடையதாகும். இவர்கள் ஆப்பிரிக்க-அமெரிக்கன் ஆவார்கள். 2013 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 18ம் தேதி இவர் வஃபாத் ஆகியுள்ளார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். 1927 -ல் இவர்கள் அமெரிக்காவிலுள்ள புனித லூயிஸில் பிறந்தார்கள். இவர்களது தந்தையார் பாதிரியார் ஆவார்கள். ஆனால் இவர்களுக்கு கிறிஸ்தவத்தில் எந்த ஆர்வமும் இருக்கவில்லை. ஆனால யோகா மற்றும் புத்தமதத்தில் ஆர்வம் இருந்தது. 1949 ஆம் ஆண்டில் மர்ஹூம் டாக்டர் கலீல் அஹ்மது நாஸிர் சாஹிப் மூலமாக அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்கின்ற நற்பாக்கியம் இவர்களுக்கு கிடைத்தது. 1951 ஆம் ஆண்டில் இவர்களது திருமணம் மதிப்பிற்குரிய மர்ஹூம் நாஸிர் அலி ரிஸா சாஹிபுடன் நடந்தது. இவர் பல வருடங்கள் வரை கனேஸா ஓப்பகன் ஜமாஅத்தின் தலைவராக இருந்து வந்தார்கள். 1955-ல் இவரது குடும்பம் மல்வாகியிற்கு இடம்பெய்ர்ந்து சென்று விட்டது. அங்கு தஃலீம் செயலராக ஜமாஅத்திற்கு தொண்டு செய்கின்ற நல்வாய்ப்பு கிடைத்தது. இந்த சமயத்தில் தனது குடும்பத்தைத் தவிர வேறு மூன்று குடும்பங்களின் கல்வி மற்றும் தர்பிய்யத்திற்கான ஏற்பாட்டை இவர்கள் செய்து வந்தார்கள். 1975 ஆம் ஆண்டில் இவர்கள் லஜ்னாவின் மண்டல தலைவியாக நியமிக்கப்பட்டார்கள். 1981 ஆம் ஆண்டிலிருந்து 1985 ஆம் ஆண்டு வரை மீண்டும் மண்டல தலைவியாக இவர்கள் நியமிக்கப்பட்டார்கள். லஜ்னா இமாயில்லாஹ்வின் ஐந்து மஜ்லிஸ்களை இவர்கள் கண்காணித்து வந்தார்கள். உள்ளூர் லஜ்னா தலைவியாகவும் இவர்கள் பணியாற்றி வந்தார்கள். 1985 ஆம் ஆண்டிலிருந்து 1995 ஆம் ஆண்டு வரை உள்ளூர் லஜ்னா இமாயில்லாஹ்வின் பல்வேறு பொறுப்புகளை வகித்தவாறு இவர்கள் தொண்டு செய்து வந்தார்கள். 1995-ல் மீண்டும் ஓகேகன் ஜமாஅத்தின் லஜ்னா தலைவியாக அவர்கள் நியமிக்கப்பட்டார்கள். தப்லீகில் இவருக்கு மிகுந்த ஆர்வம் இருந்தது. தப்லீக் பிரசுரங்களையும் மற்றும் நூல்களையும் இவர்கள் அச்சிட்டு விநியோகம் செய்து வந்தார்கள். பேருந்தில் பயணம் செய்யும் போது ஜமாஅத் பிரசுரங்களை எடுத்துச் சென்று அவற்றை அவர்கள் விநியோகம் செய்து வந்தார்கள். நூலகங்களிலும் பள்ளிக்கூடங்களிலும் இஸ்லாமிய நூல்கள் மற்றும் திருக்குர்ஆனின் ஒரு பிரதியை வைத்திருந்தார்கள். ரேடியோவிலும் டி.வியிலும் இவர்களது பல நேர்காணல்கள் நடந்திருக்கின்றது. இவர்கள் மூலமாக 50ற்கும் அதிகமான நபர்களுக்கு அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்வதற்கான நற்பாக்கியம் கிடைத்தது.

சிரித்த முகத்துடன் இருக்கும் நல்லியல்பு கொண்டவர்களாகவும் நன்கு படித்தவர்களாகவும் மிகவும் கூர்மையான அறிவுத்திறன் கொண்டவர்களாகவும் இவர்கள் இருந்தார்கள். இந்த சிறப்பம்சங்கள் இவர்களிடம்

இருந்ததனால் மிகவும் அதிகமாக பெண்கள் இவர்களை சந்திப்பதற்காக வந்தார்கள். அவர்களது உள்ளத்தில் இஸ்லாத்தின் மீதுள்ள அன்பு நிறைந்திருந்தது. சிறந்த ஆசிரியராக இவர்கள் திகழ்ந்தார்கள். அஹ்மதி பெண்கள் இவர்களை தங்களது தாய் போல் மதித்தனர். மிகவும் அன்புடன் மக்களுக்கு விசயங்களைப் புரிய வைத்து அவர்களது தவறுகளை அவர்கள் சரிசெய்து வந்தார்கள். எப்போதும் குமரிப் பெண்களிடம் அவர்கள் பர்தாவைப் பேண வேண்டும் என்று அவர்கள் போதித்து வந்தார்கள். மேலும் இஸ்லாமிய ஒழுக்கங்களை அவர்களுக்கு கற்பித்தார்கள். மேலும் மேற்கத்திய சமுதாயத்தில் காணப்படுகின்ற தீய சடங்குகளை எவ்வாறு எதிர்த்து நிற்கலாம் என்பதை அவர்களுக்கு எடுத்துக் கூறுவார்கள். இன்று நமது பிள்ளைகள் மேற்கத்திய கலாச்சாரத்தின் தாக்கத்திற்கு ஆளாகி விடுகின்றனர். பெரியவர்கள் கூட இத்தகு தாக்கத்திற்கு ஆளாகி விடுகின்றனர்.

தங்களது தாயாருக்கு தொடர்ச்சியாக பல வருடங்கள்வரை இவர்கள் தப்லீக் செய்து வந்தார்கள. இறுதியில் தமது 85 வது வயதில் இவரது தாயார் அஹ்மதியானார்கள். இதனால் அவர்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள். அல்லாஹ் இவரது தாயாருக்கு நீண்ட ஆயுளை வழங்கினான். தமது 98 வது வயதில் இவர்களது தாயார் வஃபாத் ஆனார்கள். தமது இறுதிநாள் வரை அவர்கள் மிகவும் ஆக்டிவ் ஆக இருந்தார்கள். ஜுமுஆ தொழுகையையும் தொழுது வந்தார்கள்.

இவர்கள் தமது முதிய வயதிலும் கூட நன்கு உழைத்தவாறு ஜமாஅத் பணிகளில் ஈடுபட்டு வந்தார்கள். இவர்களுக்கு ஜமாஅத் அமைப்புடன் நேசமிக்க தொடர்பு இருந்து வந்தது. கடந்த வருடம் என்னுடன் இவர்களது சந்தப்பு நிகழ்ந்தது. அல்லாஹ் இவரது பதவியை உயர்த்துவானாக! இவர்களுக்கு 9 பிள்ளைகள் உள்ளனர். தந்தைவழிப் பேரர்கள், பேத்திகள் மற்றும் தாய்வழிப் பேரர்கள், பேத்திகள் 22 பேர் இருக்கின்றனர். அல்லாஹ் இவர்கள் அனைவரையும் நன்மையில் நிலைத்திருக்கும்படி செய்வானாக! மேலும் அவர்களை இவர்களது துஆக்களுக்கு வாரிசாக்குவானாக!

★ ★ ★ ★ ★


**JUMUA KHUTBA**

**HAZRATH KHALIFATUL MASIH V**

at BAIT-UL-FUTUH MOSQUE, London.

on **01.03.2013**

Translated by : Maulavi M. RAFEEQ AHMAD H.A.

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456